# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## 1ம் தவணைக்குரிய மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 6 | குடியுரிமைக்கல்வி | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ........................................................................................

**பகுதி - I**

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. மாணவர்களைச் சிறந்த நற்பண்புமிக்க, ஒழுக்கமுடைய, நற்குணமுடைய நற்பிரசையாக மாற்றுவதற்குப் பங்களிப்பாற்றும் வீடு தவிர்ந்த இடம்
 1) கோவில் 2) பாடசாலை 3) நூல் நிலையம் 4) விளையாட்டு மைதானம்

02. உமது பாடசாலை அமைந்துள்ள மாகாணம்
 1) வடமத்திய மாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) வடமாகாணம் 4) வடமேல் மாகாணம்

03. பாடசாலை ஒழுங்கமைப்பு மாதிரியில் பிரதான பதவி வகிப்பவர்
 1) அதிபர் 2) ஆசிரியர் 3) மாணவர் 4) மாணவ முதல்வர்

04. உமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
 1) 1887 2) 1888 3) 1889 4) 1890

05. உமது சரியான வயதை உறுதிப்படுத்தும் ஆவணம்
 1) தேர்தல் இடாப்பு 2) மாணவர் வரவு இடாப்பு
 3) மாணவர் சேர்வு இடாப்பு 4) பிறப்புச் சான்றிதழ்

06. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் மூலாதாரமாக அமைவது
 1) பாடசாலைக்கீதம் 2) பாடப்பதிவுப்புத்தகம்
 3) சம்பவத்திரட்டுப் புத்தகம் 4) பத்திரிகை

07. மாணவர்களாகிய உங்களிடம் காணப்படும் நற்பண்புகளில் ஒன்று
 1) உண்மை பேசுதல் 2) பொறுமை 3) பிறரை மதித்தல் 4) மேற்கூறிய யாவும்

08. உங்களிடம் காணப்படும் பலவீனங்களில் ஒன்றாக அமையாதது,
 1) பொறுமையின்மை 2) கோபப்படுதல் 3) சுயநலம் 4) உண்மை பேசுதல்

09. இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
 1) J.H.டெரல் 2) C.W.W.கன்னங்கரா
 3) மைத்திரிபால சிறிசேன 4) பந்துல குணவர்த்தன

10. உமது வீட்டு முகவரி சரியானதா என உறுதிப்படுத்துவது,
 1) தாயிடமிருந்து 2) தேர்தல் இடாப்பிலிருந்து
 3) கிராம அதிகாரியிடமிருந்து 4) தந்தையிடமிருந்து

❖ **வினா 11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

11. விழுமியங்களுக்கு ஏற்ப செயற்படுதல் ஆசிரியரின் கடமையாகும். ( )

12. C.W.W.கன்னங்கர அவர்கள் 1931 இல் இலங்கை தேசிய சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டார். ( )

13. சுயநலம் ஒருவரிடம் காணப்படும் சிறந்த பண்பாகும். ( )

14. திட்டமிட்ட மாணவன் முறையாகச் செயற்படமாட்டான். ( )

15. பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு பாடசாலைச் சட்டத்திட்டங்கள் அவசியம். ( )

❖ **வினா 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(அரச மருந்தகசாலை, மகுடவாசகம், மாணவர் சேர்வு இடாப்பு, பிறப்புச் சான்றிதழ், தலைமைத்துவத்திற்கு கீழ்படிதல்)**

16. ஒருவர் தன்னைப்பற்றி அறிவதற்கு ........................................ உதவுகிறது.

17. பேராசிரியர் சேனக பிபிலேயினால் ........................................ அறிமுகப்படுத்தப்பட்டது.

18. .................................... மாணவர்கள் தொடர்பாகப் பாடசாலையில் காணப்படுகின்ற பொதுவான சட்ட திட்டமாகும்.

19. பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதற்கு .................................. உதவுகிறது.

20. உங்களது சேர்வு இலக்கத்தை ................................................... மூலம் அறியலாம்.

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் நான்கு தருக?
    2) உமது பாடசாலையை ஆரம்பித்தவர், ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு என்பவற்றைத் தருக?
    3) பாடசாலை தொடர்பான ஆவணங்கள் இரண்டு தருக?
    4) உமது பாடசாலையில் பாடசாலை தொடர்பாக இடம்பெறுகின்ற பிரதான விழாக்கள்இரண்டு தருக.
    5) பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கு பங்களிப்பாற்றும் மாணவர்கள் சார்பான பிரதிநிதிகள் இருவரைக் குறிப்பிடுக?
    6) உங்களிடம் காணப்படும் ஏனையவர்களைக் கவரும் செயற்பாடுகள் இரண்டு தருக?

(6 x 2 = 12 புள்ளிகள்)

02. 1) பாடசாலையின் வரலாறு என்பதனால் கருதப்படுவது யாது?
    2) உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவுவோர் நால்வரைக் குறிப்பிடுக?
    3) உங்களது பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தகவல்களைக் குறிப்பிடுக?
       1. பாடசாலையின் பெயர்
       2. அதிபரின் பெயர்
       3. கட்டிடங்களின் எண்ணிக்கை
       4. ஆசிரியர்களின் எண்ணிக்கை
       5. மாணவர் எண்ணிக்கை

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

03. 1) பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புடைய நிர்வாக அங்கத்தவர்கள் மூவரைக் குறிப்பிடுக.
    2) பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் அதிபரின் கீழ் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களாகச் செயற்படுபவர்கள் மூவரைக் குறிப்பிடுக?
    3) அதிபரின் கடமைகள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

04. 1) பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவும் பிரதான குழுக்கள் இரண்டையும் குறிப்பிடுக?
    2) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் குழுக்கள் நான்கு தருக?
    3) மாணவர்களின் கடமைகள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

05\. 1) மாணவர் ஒருவரிடம் காணப்படுகின்ற சிறந்த நற்பண்புகள் 3 தருக?
2) பாடசாலை ஒன்று சிறப்பாக இயங்குவதற்கு கல்விசாரா ஊழியர்கள் ஆற்றும் பணிகள் நான்கு தருக.
3) பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக?
1. உங்களது முழுப்பெயர்
2. உங்களது வயது
3. நீங்கள் பாடசாலைக்குச் சேர்ந்த ஆண்டு
4. உங்களது சேர்விலக்கம்

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

06\. 1) அ) இலவசக்கல்வியின் தந்தை யார்?
ஆ) அவரது முழுப்பெயர், பிறந்த வருடம் என்பவற்றைத் தருக?

2) அ) இலவசக்கல்வியின் தந்தை என்று குறிப்பிடப்படுபவர் எந்தப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட கனிஷ்ட பரீட்சையில் முதலிடம் பெற்றார்?
ஆ) அவர் பிற்காலத்தில் இலங்கையில் ஆசிரியராகப் பணியாற்றிய பாடசாலைகள் மூன்றைக் குறிப்பிடுக?

3) தனிமனித திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)